ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

**मा कुरु धनजनयौवनगर्वं हरति निमेषात् कालः सर्वम् ।**
**मायामयमिदमखिलं हित्वा ब्रह्मपदं त्वं प्रविश विदित्वा ॥**

**धनजनयौवनगर्वं**—பொருள், பந்துஜனங்கள், யௌவநம் இவைகள் இருக்கின்றனவென்றகர்வத்தை

**मा कुरु**—அடையவேண்டாம்.

**कालः**—காலமானது

**सर्वं**—ஸகலவஸ்துக்களையும்

**निमेषात्**—ஒருநிமிஷகாலத்தில்

**हरति**—அபகரித்துவிடுகிறது.

**अखिलं**—ஸமஸ்தமான

**मायामयं**- மாயாஸ்வரூபமான அதாவது இல்லாதவஸ்து இருப்பதாகத்தோன்றுகிறதான

**इदं**—இந்த ஜகத்தை

**हित्वा**—விட்டுவிட்டு

**त्वं**—நீ

**ब्रह्मपदं**—பிர்மஸ்வரூபத்தை

**विदित्वा**—நன்கறிந்து

**प्रविश**—எப்பொழுதும் சிந்தனைசெய்.

ஒரு வஸ்துவில் அபிமானமேற்பட்டால் அது ஞானத்திற்கு இடையூறுகுமாகையால் அதை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றது. செல்வம், பெண்டீர், புத்திரன், பந்துகள், யௌவநம், முதலான ஸுகானுபவத்திற்கு வேண்டிய ஸாதனங்களிருக்கின்றனவென்றுகர்வத்தையடையாதே, இவையாவும் காலத்தால் அபகரிக்கப்பட்டு ஒரு க்ஷணத்தில் நாசமடைந்துவிடும். பின்னும் இவைகளும் இவைகளால் நிரம்பிய ஸகலஜகத்தும் கனவில் பிரகாசிப்பது போல் மாயையால் பிரகாசிக்கும்படி செய்யப்படுகின்றன. உண்மையை கவனித்தால் அநித்தியமாயும், ஆபாஸமாயும், நச்வரமாயுமுள்ளவைகள். ஆகையால் இவைகளில் அபிமானத்தை வைக்காமல் மாயையின் தோற்றமென்றுவிலக்கிவிட்டு சாஸ்திரங்களாலும் ஸத்குருக்களின் உபதேசமொழிகளாலும், உண்மையான ஆத்மஸ்வரூபத்தை யறிந்து அதில் எப்போழுதும் உன் மனத்தைப் பற்றுதலுடையதாகச்செய். அவ்விதம் செய்தால் நீ நித்யமான சுகத்தைப் பெறுவால் என்று ஆசார்யர் உபதேசிக்கின்றார்.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
௧௯௰-ஹூ ஆனி-மீ ௩-௨

# இக்காலத்திற்கு அவசியம் வேண்டியது யாது?

(௨௧௯-வது பக்கத்தொடர்ச்சி)

இனி இரண்டாவது ஒற்றுமையைப்பற்றி விசாரிப்பாம். இப்பாத கண்டத்திற் பிறந்த முதல் வருணத்தார் முதல் ஐந்தாம் வருணஸ்தர் வரையில் அதிகாரங்கள் ஒவ்வொருவருக்கும் வேறுபடினும் மதங்களைக் காத்தல் யாவர்க்கும் பொதுவான தொழிலென்று ஏற்படுகிறபடியால் அது விஷயத்தில் பொதுவாய் செய்யும் பிரசங்கங்களில் இந்துக்கள் எல்லோரும் கேட்டற்குரியரென்று எமது துணிபு. இவ்விஷயத்தை ஆகமங்களின் இரகசியங்களைக் கற்றுணர்ந்த பரோபகார சிந்தை பூண்ட நம்பண்டிதர்களும் ஒப்புவார்கள். இது விஷயம் நாம் புதிதாக எடுத்துச்சொல்லவில்லை. பாகவதம் முதலிய கிரந்தங்களிலும். பல புராணங்களிலும், சூதர் உபதேசிப்பவரும் ரிஷிகள்கேட்பவருமாயிருந்ததைக் கொண்டு நன்கு தெரிகின்றது. பண்டிதர்களே! ஆகம இரகசியங்களை அறியுங்கள். வைதிக கர்மங்களிலதிகாரிகளல்லாத ஸ்திரீ சூத்திரர் முதலானவர்களுக்குப் புராண தர்மங்களையேனும் போதியுங்கள். இனியேனும் நான்காம் வருணத்தவருள் உங்களுக்கு துவேஷமில்லை என்பதை வெளியிடுங்கள். அவர்களுக்கு உசிதமாய் ஆகம புராண இதிகாசங்களிலுள்ளவதிகாரங்களை அறிவியுங்கள். இன்னும் சிரமத்தைக் கருதி மற்ற வருணத்தவரை ஆதரிக்காமலிருந்தால், சிறிது காலத்திலே நமது. மதம் முற்றிலும் ஒழிந்து விடுமென்று தோன்றுகிறது. வைதிக கருமங்களில் அவருக்கு எவ்வளவு வரையில் அதிகாரமுண்டோ அம்மட்டில் அங்கீகரிக்கவேண்டும். நாஸ்திகம், கிறிஸ்துமதம், அஞ்ஞானம், அசத்தை முதலியன ஓங்கி வளரும்இக்கலிகாலத்தில் நமது ஆசாரம் முற்றிலும் நிலைபெறுவதரிதாகும். இக்காலத்தில் நம் பண்டிதர்

கள் வெளிவந்து பிரசங்கவாயிலாகப் பிறமதக் குற்றங்களையும் நம் மத மேன்மைகளையும் வெளியிடாதொழிவராயின் இம்மதம் குறைந்துபோவதற்குத் தடை என்னை? ஆசாரத்திற்குச் சிறிது குறை நேரிடினும் ஆபத்துக் காலத்தில் தோஷமில்லை. அதுகொண்டே நம் முன்னோர்களும் அவ்விதம் அனுட்டித்தார்கள். பாருங்கள்! நமது தேசத்தில் ஜகத்குருவெனப்பெயர் பெற்ற ஸ்ரீசங்கரபகவத்பாதாசார்யஸ்வாமிகள் அவர்கள் பௌத்தர், நாஸ்திகர், பாஷண்டர் முதலாயினோருடன்வாதித்து அவர்களுக்கு மதவுண்மைகளைப் போதித்து அவர்களை அத்வைதிகளாக்கினமையை அவர் சரித்திரங்களால் நீங்கள் கண்டதில்லையா? அவ்விதம் ஸ்ரீ இராமாநுஜ முனிவரும் திருக்கோட்டியூரில் யாவரும் கேட்கச் சிறந்தோபதேசம் புரிந்தமையும், அது விஷயத்தில் அவருக்கும் அவர் குருவுக்கும் நடந்த ஸம்பாஷணையைப் பற்றியும் சிறிதும் நீங்கள் கேட்டதில்லையா? ஆதலால் இக்காலத்தில் சிரமத்தை அதிகம் கவனியாமல் வெளிவந்துமுடிந்தவரையில் சாஸ்திரநியமங்களைக் கைவிடாமல் மதத்தை நிலை நாட்டுங்கள். இக்காலத்திலோ உதங்க முனி போன்ற சிஷ்யர்களும், உபமன்யுபோன்ற குருவும் அகப்படுவது அரிது. அதனாற்றான் இரண்டாவது ஒற்றுமை நிலை பெறும்.

மூன்றாவதோ இல்லறவாழ்க்கையில் விருப்பமற்று மோக்ஷத்தை விரும்பும் துறவிகளிற் குருவுக்கும்சிஷ்யர்களுக்குமுள்ளது. அதில் குருவின் பிரசங்கம் சிஷ்யனுள்ளத்தைக் கவருமென்றறிக. இதில் முதல் வகுப்பில், உலகத்தில் மனிதர்கள் எல்லோரும் அதிகாரிகள். ஆதலால் அதில் அவசியம் முயலவேண்டும். இரண்டாவதோ பண்டிதர்களுக்கு இன்றியமையாத தொழில் நம் தேசங்களுக்கும், மதங்களுக்கும் பெரும் புகழ். அதற்கு நம்மவரே அதிகாரிகள். அதனாலுண்டாகும் பயன் நம்மவருக்குள்ளே நிலை பெறும். மூன்றாவதோ இவருக்குள்ளடங்கியது. ஆதல்கொண்டே ஸ்ரீமத் கண்ணபிரான், முன்னர் ஸ்ரீஇராமதர்மத்தையும், பின்னர் மோக்ஷதர்மத்தையும் உபதேசித்தார் என்றறிக. உலகத்தில் தவம்புரிவோராயினும் நல்ல விடங்கிடைத்தாலொழிய அவருக்குத் தவம் நிறைவேறாது. உலகம் தர்மக்குறைவால் வருந்துங்காலத்தில் அவ்வித தேசங்கிடைக்குமோ. காட்டிற் செல்வி

னும் நாட்டிற்கதிகமாய் அவ்விடத்தில் நிற்பந்தங்களிருக்கின்றன ஆதலால் நண்பர்களே! பல பிரசங்கங்களால் தர்மங்களைச் சீர்திருத்துங்கள்! மதங்களைக் காருங்கள்! உங்களிடம் நூலறிவும், நுண்ணறிவும் பிரசங்க சக்தியும் பெரிய கல்வியுமிருக்கின்றதே. அவைகளை வீணாக்காது வெளியில் வந்து பிறருக்கு உபதேசியுங்கள்! ஞான விஞ்ஞானங்களை நிலை நிறுத்துவது இக்காலத்திற் பிரசங்கமொன்றே. அஃதில்லாவிடின் பொன் மலர்போன்ற முகமேனும் பொட்டைக் கண்ணாயிருந்தால் உபயோகப்படாததுபோல், மற்றொன்றும் பயன்படாது. இனி நம்மவருக்கு ஆவசியகம் வேண்டியது யாதெனில் பிரசங்க சக்தியே என்று விடையளித்து முன்னின்று அப்பிரசங்கத்தை நிலை நிறுத்தக் கருணாகரரான கடவுள் உங்களுக்கு அருள் புரிவாராக.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

---

# ஸத்யகாம ஜாபாலன் பிராமணனா?

சாந்தோக்கிய உபநிஷத்தில் 4-வது அத்தியாயம் 4-வது காண்டத்தில் ஸத்யகாம ஜாபாலன் என்னும் ஒரு சிறுவன் தன் தாயாரைப் பார்த்து, "என்தாயே, நான் ஒரு குருவின் வீட்டிலிருந்து வேதங்களைப் படிக்க ஆசைப்படுகிறேன். என்னுடைய கோத்ரம் என்ன" என்று கேட்டான். தன்னுடைய கோத்ரம் என்ன என்று கேட்டதினாலேயே ஸத்யகாமன் சூத்திரனில்லை என்று நிச்சமாய்க் கொள்ளலாம். ஏனெனில் சூத்திரர்களுக்கு கோத்திரமே கிடையாது. அதனால் ஸத்யகாமன் வைசியனாகவோ அல்லது க்ஷத்திரியனாகவோ அல்லது பிராமணனாகவோ இருக்கலாம். ஏனென்றால் த்விஜர்களுக்கு வேதம் வாசிப்பதற்கு அதிகாரம் உண்டு. ஸத்யகாமனுடைய தாயாராகிய ஜபாலை தன்னுடைய குமாரன் கேட்டகேள்விகளுக்குத் தனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது என்று சொன்னாள். மேலும் ஸத்யகாமனைப் பெற்றபொழுது சிறியவளாயிருந்ததாலும், அதன்பிறகு பல வீடுகளில் காரியங்கள் செய்து கொண்டிருந்ததாலும், இந்த கோத்திர

விஷயத்தைப்பற்றி விசாரிக்க தனக்கு சௌகரியப்படவில்லை என்று சொன்னாள். தன் பிள்ளை கேட்ட கேள்விக்கு மாத்திரம் பதில் சொன்னாளே தவிர, தன்னுடைய ஜாதி என்ன என்பதைப் பற்றி அவள் சொல்லவில்லை. அவள் தான் பிராமணஜாதியில் பிறந்தவள் என்று சொல்லியிருந்தால் சந்தேகத்துக்கு இடமில்லை. அவள் அப்படிச்சொல்லாததினால்ஸத்யகாமன் த்விஜர்களில் எந்த ஜாதியில் பிறந்தவன் என்று நிச்சயமாய் கூறமுடியவில்லை.

த்விஜர்களுக்கு உபநயன ஸம்ஸ்காரம் உண்டு என்று எல்லோருக்கும் தெரிந்தவிஷயம் பிராமணர்களைப் போலவே, மற்ற இரண்டு ஜாதியார்களுக்கும் கோத்திரங்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது.

ஸத்யகாமன் தன் தாயார் சொன்ன வார்த்தைகளை ஒன்றும் ஒளிக்காமல், உள்ளதை உள்ளவாறே தான் குருவாக அடைய எண்ணியிருக்கும் கௌதமரிடத்தில் தெரிவித்தான். கோத்ரம் தெரியாமல் இருப்பவனுக்கு உபநயன ஸம்ஸ்காரம்பண்ணிவைக்க நியாயமில்லை. சிறுவனோ தன்னுடைய கோத்ரம் தனக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டான். அப்படி இருந்தும் கௌதமர் ஸத்யகாமனைப்பார்த்து "பிராமணனல்லாதவன் இம்மாதிரி உண்மையைப் பேசியிருக்கமாட்டான்" என்று சொல்லி, அப்பையனுக்கு உபநயனம் செய்துவைத்தார்.

கௌதமருடைய வாக்கியத்திலிருந்துஸத்யகாமன் பிராமணனாகத்தான் இருக்கவேண்டும் என்று கொள்வது சரியாகுமா? ஸத்யகாமன் உண்மையைச் சொன்னதினால் மாத்திரம் பிராமணனாகக் கருதப்படலாமா? க்ஷத்திரியர்களிலும், வைசியர்களிலும் உண்மை பேசுகிறவர்கள் இல்லையா? அவர்களுக்கும் உபநயனம், வேதாத்தியயனம் இருப்பதால் ஸத்யகாமன் க்ஷத்திரியனாகவாவது, வைசியனாகவாவது இருந்திருக்கலாம். ஆகையால் ஸத்யகாமனைப் பிராமணன் தான் என்று நிச்சயமாய்க் கூறமுடியாது.

உண்மையைச் சொல்லுகிறவர்கள் எல்லோரும் பிராமணர்களாவார்களா? அல்லது எல்லா பிராமணர்களும் எப்போதும் உண்மை பேசுபவர்களா? எக்காலத்திலும் எந்த ஜாதியிலும் நிஜம் பேசுகிறவர்கள் சிலர் இருப்பது போலவே, பொய் பேசுபவர்களும் சிலர் இருப்பார்கள். "பிராமணன் எப்போதும் உண்மை

பேசுவான் என்பதும், உண்மை பேசுபவன் பிராமணனாகத்தான் இருக்கவேண்டும் என்பதும் நம்பத்தக்கனவைகளாக இல்லை.

எஸ். பாலசுப்பிரமணியன்.

---

## ஸத்யகாம ஜாபாலன் பிராமணன்தான்.

**S**. பாலசுப்பிரமணியன் என்கிறவர் கௌதமருடைய வாக்கியத்திலிருந்தும் ஸத்யகாமன் பிராமணனாகத்தான் இருக்கவேண்டுமென்று கொள்வது சரியாகுமா? என்று தொடங்கிமுடிவில் ஸத்யகாமன் க்ஷத்திரியனாகவாவது வைசியனாகவாவது இருந்திருக்கலாம். ஆகையால் ஸத்யகாமனை பிராமணன்தான் என்று நிச்சயமாய்க் கூறமுடியாது என்று நான்காவது பாராவில் கருதுகிறார்.

இங்கு இவ்விதம் சங்கிப்பதற்கு இடமில்லை என்று எமக்குத் தோன்றுகிறபடியால் அதைப்பற்றி விசாரிக்க முன் வருகிறோம். சாந்தோக்ய உபநிடதத்தின் நான்காவது அத்யாயம் நான்காவது காண்டத்தில் இந்த உபாக்கியானம் சொல்லப்பட்டிருக்கின்றது. அங்கு ஸத்யகாமனென்று பெயர் பூண்ட ஒருவன் தன் அன்னையிடம் சென்று நான் பிர்மசர்யத்தையடைந்து குருகுலவாசியாயிருந்து வேதாத்தியயனம் செய்யப்போகிறேன். எந்த கோத்திரத்தில் பிறந்தேன். என் கோத்திரம் என்ன? நான் எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவனாக ஆகிறேன்? என்று வினவுங்கால் அவள் நான் யௌவனப் பருவத்தில் பதிக்குப் பணிவிடைசெய்வதிலேயே எப்பொழுதும் கவனம் செலுத்திக்கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் தான் உன்னையடைந்தேன். பால்யத்திலேயே உன் பிதா காலம் சென்று விட்டபடியால், நீ எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவனென்பதை நானறியவில்லை என்று கூறினாள். உடனே ஜாபாலன் கௌதமரென்கிற மஹானிடம் சென்று நான் பிர்மசர்ய நியமத்துடன் பூஜ்யர்களான தங்களிடம் குருகுலவாஸம் செய்யவேண்டுமென்று வந்திருக்கிறேன். தாங்கள் என்னை கிரகித்து அனுக்கிரகிக்க வேண்டுமென்று வேண்டினான். உடனே அந்த மஹான் உன் கோத்திரமென்னவென்று அவனைக்கேட்குங்கால் அவன் தனக்குத் தன் கோத்திரம் தெரியாதென்றும்

தாயாரிடம் கேட்டதிலும் அவளும் இவ்விதம் கூறினளென்று அவள் மொழிந்ததையறிவித்து என் தாய் பெயர் ஜபாலே. என் பெயர் ஸத்யகாமன். இதுதான் எனக்குத் தெரியும் என்றும் நடந்த உண்மையை யறிவித்தான். இவ்வசனத்தைச் செவியுற்ற மஹரிஷியும்

नैतदब्राह्मणो विवक्तुमर्हति ।

பிராமணனில்லாமலிருந்தால் இவ்விதம் கூறுவதற்கு சக்திபொருந்தியவனாகமாட்டான் என்று மொழிந்திருக்கிறார்.

இங்கு "விவக்தும்" என்று ஒரு பதமிருக்கிறது. வக்தும் என்றுசொன்னாலே போதுமானதாயிருக்க வி வக்தும்என்று வி. என்கிற உபஸர்க்கத்தைச் சேர்த்திருப்பதால் விசேஷமாகச் சொல்லுவதற்கு என்று பொருள். அதாவது பிர்மசர்யத்துடன் குருகுலவாஸம் செய்வதற்கு கோத்திரத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்று மாதாவிடம் பிரச்னம்செய்தது, அவள் கூறியமறுமொழியைச்சேர்க்காமலும் குறைக்காமலும் அவ்விதமே சொல்லியது, தாங்கள் எப்படியிருந்தாலும்எனக்கு அனுக்கிரகம்செய்ய வேண்டுமென்று பக்தியுடன் பிரார்த்தித்தது முதலியவிசேஷ அபிப்பிராயங்களைச் சொல்வதற்கு என்று கருத்தாகும். இந்த அபிப்பிராயத்தையே அதின் பாஷ்யத்திலும்

"नैतदब्राह्मणो विशेषेण वक्तुमर्हति आर्जवार्थसंयुक्तम् । ऋजवो हि ब्राह्मणाः स्वभावतः । यस्मात् न सत्यात् ब्राह्मणजातिधर्मादगा नापेतवानसि । अतो ब्राह्मणं त्वामुपनेष्ये ।

பிராமணனல்லாத ஒருவன் இவ்விதம் ருஜுவான அர்த்தத்துடன் கூடிய விசேஷமான வார்த்தையை இயற்கையில் கூறவியலாது. பிராமணஜாதிக் கேற்பட்ட ஸத்யத்தையே கூறவேண்டுமென்கிற தர்மத்திலிருந்தும் அற்பம் கூட மாறுமல் அதை நன்கு ரக்ஷித்தபடியால் உன்னைப் பிராமணனாகவே கருதுகிறேன் என்று வெளிவிடப் பட்டிருக்கிறது. இவ்விடத்திலுள்ள விவக்தும் என்கிற மஹரிஷி வசனத்தையும் பாஷ்யாபிப்பிராயத்தையும் கவனித்தால் ஜாபாலன் பிர்மசர்ய நியமத்துடன் குருகுலத்தில் வஸிப்பதற்கு கோத்திரத்தை யறிந்துகொள்ளவேண்டுமென்று நினைத்துத்தான்

தாயாரிடம் தன்னுடைய கோத்திரம் என்னவென்று வினவி அவளால் கூறப்பட்ட மறுமொழியையும் நன்கு தெரிந்துகொண்டு கௌதமரிடம் சென்று அவர் கேட்குங்கால் இவன் சொன்ன மறுமொழியிலிருந்தும் குருகுலத்திற்குச் சென்றால் கோத்திரக் ஞானம் அவசியம் வேண்டுமென்றும் தனக்குத்தெரியாவிட்டாலும் தாயாரிடமாவது கேட்டு அதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கேட்டதினாலும் தம்மிடம் ஆதிமுதல் நடந்த விஷயங்களை ஸத்தியமாகத் தெரிவித்தபடியாலும் இவன் பிராமண ஜாதிக்கு விதிக்கப்பட்ட தர்மாநுஷ்டானத்தை நன்றாய் நடத்தியிருப்பதால் இவன் பிராமணன்தானென்று தீர்மானித்தாரேயன்றி சத்தியவசனத்தைஒன்றை மாத்திரம் அவர் எடுத்துக் கொள்ளவில்லை.

க்ஷத்திரிய வைசிய ஜாதிகளில் ஜனித்தபிள்ளைகளுக்கும் குருகுலவாஸத்திற்குக்கோத்திரக்ஞானம்வேண்டியிருந்தாலும் அந்தப்பிள்ளைகளுக்கு தங்களுக்குத்தெரியாவிட்டாலும்பிறரிடமாவது அறிந்து கொண்டுதான் குருகுலத்திற்குப் போக வேண்டுமென்கிற இந்த ஞானம் ஏற்படுவது சிரமம். அப்படி ஏற்பட்டாலும் குரு பிரச்னம் செய்யுங்காலத்தில் கோத்திரம் தெரியவில்லை என்று சொன்னால் தன்னை அவர் ஏற்றுக்கொள்ளமாட்டாரோவெனச் சங்கித்து வேறொன ஒரு கோத்திரத்தை தம்முடையதென்று அவரிடம் சொல்லுவோமென்கிற மனோதைர்யம் இதர ஜாதிகளுக்கு ஏற்பட நியாயமுண்டு. பிராமண ஜாதிப் பிள்ளைகளுக்கு அவ்வளவு தைர்யம் உண்டாகாது இருக்கவும் கூடாது. இந்த அபிப்பிராயத்தைக் கொண்டுதான் கீதையில்

शमो दमस्तपश्शौचं क्षान्तिरार्जवमेव च ।
ज्ञानं विज्ञानमास्तिक्यं ब्राह्मं कर्म स्वभावजम् ॥

இதினால்பிராமணர்களுக்குஇயற்கையிலிருக்கும் குணங்களைக்கூறி ஆர்ஜவம் என்கிற பதத்தால் ஸத்யவசனத்தையும் ஸ்வபாவகுணமாகக்கூறியிருக்கிறார். இந்தகீதாவசனத்தால் பிராமண ஜாதிக்குத்தான் ஸத்யவசனம் ஸ்வபாவமென்று ஏற்பட்டது. மேலும் வைத்தியநாத தீக்ஷிதீய மென்கிற தர்மசாஸ்திரத்தில பிராமண லக்ஷணத்தைக் கூறுமிடத்தில்

एकदेशमतिक्रम्य वेदस्याचारवान् ऋजुः ।
स ब्राह्मणस्समाख्यातः निभृतस्सत्यवाग्घृणी ॥

பிராமணனுக்கு ஸத்தியம் பேசுவதையும் லக்ஷணமாகக் காட்டியிருக்கிறார்.

கீதை 18 ஆவது அத்தியாயத்தில்

शौर्यं तेजो धृतिर्दाक्ष्यं युद्धे चाप्यपलायनम् ।
दानमीश्वरभावश्च क्षात्रं कर्म स्वभावजम् ॥

என்று க்ஷத்திரியர்களுக்கு ஸ்வபாவமாயிருக்க வேண்டிய குணகர்மாக்களைக் கூறுமிடத்தில் ஸத்யவதநத்தைச் சொல்லவில்லை. வைச்யர்களைப் பற்றிப் பேசுமிடத்திலும்

कृषिगोरक्षवाणिज्यं वैश्यं कर्म स्वभावजम् ।

என்கிற வசனத்தால் ஸத்யவதநத்தை ஸ்வபாவ குணமாகச் சொல்லவில்லை. இந்த சாஸ்திரார்த்தங்களை கவனித்தால் பிராமண ஜாதிக்குத் தான் ஸத்யவதனம் ஸ்வபாவமாய் ஏற்பட்ட குணகர்மாவென்று நன்கு அறியப்படுகின்றது கௌதமர் அறிவாளிகளிற்சிறந்தவராகையால் தம் ஞானபலத்தைக் கொண்டே ஜாபாலனை எந்த ஜாதி என்று அறியும் சக்தியுற்றவராயிருப்பினும் வெளிப்படையாயும் இவன் செய்யும் வியவகாரங்களாலும் பிராமண ஜாதிக்கிருக்கவேண்டிய லக்ஷணம் இவனிடமிருக்கிறதென்பதைக் காண்பிக்கவேண்டி இவ்விதம் கூறியிருக்கிறாரேயல்லாமல் இதர ஜாதிகளில் சத்யவதநம் இல்லையென்றாவது அவர்கள் சத்தியத்தைச்சொல்லக்கூடாதென்றாவது அவர் கருதவில்லை. பிராமணர்கள் ஸத்யம் தவறாமல் என் முன் காலங்களிலிருந்திருக்கக் கூடாது. தற்காலம் கலியின் தோஷத்தாலும் கெட்ட பழக்கங்களாலும் ஸத்தியத்திலிருந்தும் பலவிதமாய் மாறியிருப்பதைக் கொண்டு எப்பொழுதும் இவ்விதமே தான் இருந்திருப்பார்களென்று எப்படி தைர்யமாய்ச் சொல்லமுடியும். இந்தஸமயம் ஒவ்வொரு ஜாதியின் குணங்களும் கர்மாக்களும் இவ்விதமென்று சொல்ல வியலாத நிலைமையில் மாறியிருப்பதைக்கொண்டு உலகம் தோன்றியநாள் முதல் இவ்விதமேதான் இருக்கிறதென்று நினைப்பது தவறேயாகும். ஆகையால் ஸத்யகாமஜாபாலனை பிராமணனென்று கௌதமர் கருதியது உசிதமே, ஸத்தியம் பேசுகிறவர்

களெல்லாரும் பிராமணர்கள் என்று கௌதமர் அபிப்பிராயப்படவில்லை. பிராமணர்களுக்கு ஸ்வதர்மமாகக் கூறப்பட்ட குணகர்மாக்கள் இவனிடம் இருப்பதால் இவன் பிராமணனென்று அவர் எண்ணினார் என்பது திண்ணம். இதினால் ஸத்யகாமனை க்ஷத்திரியனாகவோ, வைச்யனாகவோ, ஏன் நினைக்கக்கூடாதென்கிற நான்காவது பாராவில் கொண்ட சங்கை சரியல்லவென்று தள்ளப்பட்டது

மேலும் ஒரு விஷயத்தில் நமக்குச் சங்கையேற்பட்டால் பொதுவிதியைக் கொண்டும் தம்மனத்திற்கேற்படும் நிச்சயத்தைக் கொண்டும் அதைத் தீர்மானிப்பது வழக்கம் கோடியில்ன்று. பொதுவிதியின் இலக்கணத்திற்கு மாறுதலாயிருப்பதைக் கொண்டு இவ்விதம் தீர்மானம் செய்வது சரியல்லவென்று கூறுவதும் தவறேயாகும். மஹான்களுக்கு ஒரு வஸ்துவில் சங்கையுண்டானால் அவர்களின் மனோபாவத்தில் எப்படித் தோன்றுகிறதோ அதுவே உண்மை என்று

**सतां हि सन्देहपदेषु वस्तुषु प्रमाणमन्तःकरणप्रवृत्तयः ।**

என்கிற இந்த வசனத்தால் காளிதாஸகவியும் கூறியுள்ளார். இதினால் ஐந்தாவது பாராவில் கூறிய விஷயங்களும் அனுசிதமென்று நிராகரிக்கப்பட்டது

இதுவரையில் எம்மால் கூறப்பட்டது பூராவும் ப்ரச்னம்செய்தவரின் அபிப்பிராயத்தை அனுஸரித்து எழுதப்பட்டது. தத்வார்த்தத்தைக் கவனித்தால் இந்த ஆசங்கைக்கே இடமில்லை அதாவது-கௌதமர் ஸத்யகாமனை வினவுங்கால் அவனை இன்னஜாதியென்றறியாமல் சங்கைகொண்டா, அல்லது வேறுவிதம் சந்தேகம் கொண்டா? ஜாதி விஷயமான சங்கை அவனிடம் ஏற்பட்டிருக்கும் பக்ஷத்தில் உன் கோத்திரமென்னவென்று அவர் வினவியது தவறேயாகும். பின்னே உன் ஜாதி என்ன? அல்லது நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்று கேட்கவேண்டும். அவ்விதம் பிரச்னம் செய்யாமல் கோத்திரவிஷயமான சந்தேகம் ஏற்பட்டுப் பிரச்னம் செய்திருப்பதால் ஸத்யகாமனை பிராமணனென்று அவர் முந்தியே நன்றாயறிந்திருக்கிறபடியால்தான் ஜாதி விஷயமான சந்தேகம் ஏற்படாமல் கோத்திர விஷயமான சங்கை ஏற்பட்டு

அவனை உன் கோத்திரம் என்னவென்று கேட்டிருக்கிறார். ஆகையால் இங்கு பூர்வபக்ஷம் சங்கிப்பதற்கே அற்பம்கூட இடமில்லை என்று நன்றாய் தெரிகின்றது.

இந்த விஷயமாய் எனக்கிருக்கும் அற்பஞானத்தைக்கொண்டு இவ்விதம் ஸமாதானம் கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு மேலும் கசடறக்கற்றறிந்த பண்டித சிகாமணிகள் இந்த விஷயத்தில் உண்மையான சாஸ்திரார்த்தத்தை வெளியிட்டு ஆஸ்திகர்களுக்கு மனத்திருப்தியை யுண்டுபண்ணுவார்களென்று ஆதாவுடன் எதிர்பார்க்கும் ஆஸ்திக தாஸன்,

கே. தெக்ஷிணாமூர்த்தி.

---

# ஹிந்துமத அனுஷ்டானம்.

உதாரணமாய் மாமரம் என்றால் அதன் குணத்தை யாவருமறிந்திருக்கிறோம். அதற்கனுகுணமாகவே அம்மரக்கிளை ஒவ்வொன்றும்பற்பல வகையிற் பிரிந்திருப்பினும்பூ,பிஞ்சு, காய், கனிகளின் பேதத்தையே காணமுடியாது. ஆகவே இம்மாறுதல் மரத்திற்கழகேயொழிய பாதிப்பதல்ல. பாதிக்கின்றதென்றால் அக்கிளையை உருவி என்பார்கள். உடனே அக்கிளையை வெட்டிவிடுவான்.வெட்டாவிடில் அம்மரத்தையே நாசம் செய்துவிடும். ஆகவே ஒவ்வொரு கிளையும் இந்துமதத்தைப் பாதிக்கிறதென்று சொல்வது சற்றும் பொருந்தாது. ஹிந்துமதத்தில் சுமார் 6-பிரிவுகள் உள. அவை சைவம், வைஷ்ணவம், பைரவம், சாக்தம், ஸௌரம், காணபதம் என்பன இவை ஹிந்துமதத்தைப் பாதிப்பதல்ல. இவைகளிலும் இருந்த சில ஆபாஸ அனுஷ்டானங்களை நம் பரமாசார்யாள் பகவத்பாதரவர்கள் களைந்தெறிந்தனர். அதனால் இக்கிளைகளோடு அழகாய்ப் பிரகாசிக்கின்றன. இம்மட்டாபுல் உருவி விழுந்ததுபோல் பௌத்தமதம் முதலிய இரண்டொன்று நம்மதக்கிளையில் பரவ ஆரம்பித்தன. அதையும் கெடுதலென அகற்றிவிட்டனர். ஆகவே இதுகாறும் களையெடுத்த பயிர் போல் செழித்தோங்குவதில் இப்போது சிற்சில ஆர்யஸமாஜமென்னும் பிர்மஸமாஜமென்னும் கிளம்பியேறுகின்றன. இவை

தான் இப்போது நம் மதவிருக்ஷத்தைப் பாதிக்கின்றன. இதற்கு ஓர் மகான் எக்காலம் தோன்றுவாரோ இனி அடுத்தாற்போல் கீதை உள்பட எந்த ஒரு தனிக்கிரந்தத்தையும் ஹிந்து மதம் அஸ்திவாரமாகக் கொண்டிருக்கவில்லை. கீதை ஒரு தனி வழியைக்காட்டுகின்றது. ஆனால் ஆசார அனுஷ்டானங்கள் அதனால் பாதிக்கப்படவில்லை என்கிறார். இதை கவனிப்போம். இந்து மதம் கீதை உள்பட எந்த ஒரு தனிக்கிரந்தத்தையும், அஸ்திவாரமாகக் கொண்டிருக்கவில்லையென்கிறார். இது விந்தையிலும் விந்தை நான் முற்கூறியபடி ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு பிரமாண நூலையே ஆதாரமாகக் கொண்டிருக்குமே தவிற தனியாய் ஒருபோதுமிராது ஆனால் நமது வீடுகளுக்கு முதலில் அஸ்திவாரத்தைப்போட்டுக்கொண்டு கட்டடத்தை ஆரம்பிப்பதுபோல பிரமாணநூலை வைத்துக்கொண்டு ஆரம்பிக்கவில்லை. அனுதிஸித்தமாய் இருக்கும் மதத்தை ஈசன் முகமாகவும் அவதார புருடர்கள் முகமாகவும், வந்த கிரந்தங்கள் காக்கின்றன. ஆகவே கீதை முதலியவைதான் ஆதாரம் கீதை முதலிய நூல்களை ஆதாரமாய்க் கொண்டிராவிடில் எதை ஆதாரமாய்க் கொண்டிருக்கிறதென்பதைச் சொல்லவில்லை. ஆகவே ஆகாயப் பஞ்சாங்கத்தின் கதையாய் இருப்பதைத் தவிற வேறல்ல. உண்மையில் நம்மிந்து மதத்திற்கு வேதசாஸ்திரங்கள் தான் பரமாதாரம் வேறு ஆதாரம் பகவான் தான். இவைகள் பிரமாணமல்லவென்றால் பகவானை வென்று கேட்டால் அதைத் தான் எவ்விதம் ஒப்புக் கொள்வாரோ தெரியவில்லை. இப்பிரமாணக் கிரந்தங்களாதாரமில்லையென்றால் பகவானும் ஏற்றுக்கொள்ளத் தக்கவரல்ல ஏனெனில் பகவானது ஸ்வரூபமும் அவதார விசேஷங்களும் லீலாவிசேஷ்டிதங்களும் அடியார்களடையும் வழிபாடும் யாவும் அவைகளில் தான் கூறப்பட்டிருக்கின்றன. இனி அவை வேண்டாமென்றால் பகவானது உண்மையால் கீதை பாரதத்தின்நடுவில்இருந்தபோதிலும் அதில் நம் மதத்தின் ஸாரமான பரம ரகஸ்யமெல்லாம் எளிதாய் அறியும்படி தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால் தான் அதை நம் முன்னோர்கள் வேதங்களின் ஸாரத்தையும் தத்துவத்தையும் போதிக்கின்ற உபனிடதமென்று ஏற்றுக்கொண்டார்கள்.

(தொடரும்.)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

ஆச்சரியமடைந்து தனக்கு ஆதாரவாய் நின்ற அவ்விருக்ஷத்தைச் சிவஸ்வரூபமாகப்பாவித்து 'இது நம்மைப்பாதுகாக்கவந்தகருணை வடிவு'என்று நிச்சயித்தார். அங்கிருந்தவண்ணமே அதன் மூலமளவும் ஜோதிஸ்வரூபமாகக்காணப்படும் துவாரத்தைக்கண்டு அவ்வழியே நுழைந்து அங்கு ஒளிப் பிழம்பாய் விளங்கும் பெரிய நகரத்தைக்கண்டார்; "இதுவென்ன ஆச்சரியம்! இந்த லயகாலத்திலும் யாதொரு நாசமில்லாமல் ஜலமத்தியில் ஜோதிஸ்வரூபமாய் விளங்குகின்றதே"என்று அதனடியில் இறங்கவும், அவ்விடத்தில் சிவகுமாரரான ஷண்முகக்கடவுள் அம்மாத்தில் பழுத்திருக்கும் கனிகளைப் புஜித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து மிகவும் ஆச்சரியங்கொண்டு வணங்கினர். "ஒஷண்முகக்கடவுளே, இந்த க்ஷேத்திரத்தின் பெயர் என்னே? இந்த விருக்ஷம் எத்தன்மைத்து? தேவரீர் இப்பழங்களைப் புஜித்துக்கொண்டு இங்கு வசிக்கும் காரணம் என்னே? யாருடைய மகிமையினல் இந்த ஜலப்பிரளயத்திலும் இந்நகரம் அழியாதிருக்கின்றது? இவையாவும் என்பால் கருணை கூர்ந்து அருளிச்செய்யவேண்டும்"என்றுபிரார்த்தித்தனர். ஆறுமுகக்கடவுள் "ஒ மார்க்கண்டேயனே, இது காஞ்சிக்ஷேத்திரம் என்று சொல்லப்படும். இந்த க்ஷேத்திரத்தைப் பிரளயங்கள் உண்டாகுந்தோறும் மஹாதேவி தனது தேஜோமயமாகியபிரகாசத்தினல் அழிவுருவண்ணம் காப்பாற்றிவருகின்றுளாதலால் இது பிரளயஜித்தெனப் பெயர்பெற்றது. அந்த விருக்ஷம் சாக்ஷாத் சங்கருடைய ஸ்வரூபமாயுள்ளது. மஹாதிரிபுரசுந்தரிக்கு நாயகராகிய காமேச்வரரே இந்த விருக்ஷபீஜமாய் உள்ளவர். அதனுல்தான் இங்கிருக்கும் எனது கடவுளுக்கு ஏகாம்பரர் எனத்திருநாமம். அவருடைய கருணை உன்னிடத்தில் இருந்தபடியால்தான் இந்த வெள்ளத்தில் அந்த ஏகாம்பரம் உனக்கு ஆதாரவாயிற்று. இந்த விருக்ஷத்தின் கனியை எவர்கள் பக்தியாகப் புஜிக்கின்றார்களோ அவர்கள் வேதவித்யாகுருவாகின்றார்கள். ஆகையால், நான் இப்பழத்தை நாடோறும் புஜித்துவருகின்றேன்"என்று அருள்செய்ய மார்க்கண்டேயர் நமஸ்காரம் செய்து அம்மாத்தினடியில் தாமும் இருந்து அதன் கனியை உண்டு 'இந்தக்கனியை எவனொருவன் புஜிக்கின்றானே அவன் கோடிலிங்கார்ச்சனைப்பலனை அடைவான்' என்று வரம் கொடுத்து வாழ்ந்திருந்தனர்.

துங்கபத்திராதீரத்தில் சிருங்கிசைலத்தில் வசிக்கின்ற கிரௌஞ்சன் என்னும் பிராமணன் நாடோறும் சிவபக்தசிரோமணிகளாகியபிராமணோத்தமர் பூஜிக்கும் சுவர்ணலிங்கங்களை அபகரித்தான், அதனை விற்று ஜீவனம் செய்துவந்தனன். அப்பாவத்தால் அவனுக்குப் பதினாறுபிள்ளைகள் அலிகளாய்ப் பிறந்தன. அவன் அப்பிள்ளைகளைப்பார்த்து மிகவும் துக்கித்து அவ்வலிரூபத்தை நிவர்த்திக்கப் புண்யக்ஷேத்திரங்கள்தோறும் சென்று தரிசித்துக்கொண்டுவருங்கால், இந்த ருத்திரசாலையையடைந்து மா விருக்ஷத்தைப் பார்த்தான், அதனடியில் ஒருக்ஷணகாலம்இருந்து தன்னிளைப்பை மாற்றிக்கொண்டு தன்னகரமடைந்தனன். மாவடியில்வாசம்செய்த புண்ணியவிசேஷத்தால் அப்பிள்ளைகள் புருஷரூபமடைந்தார்கள். அதனைப்பார்த்து 'இனி நம்முடையகுலம் விருத்தியடையும். இவ்வாறு விருத்தியடையச்செய்தது ருத்திரசாலை' என நிச்சயித்து ஆனந்தபரவசனாய் 'இளைப்பாறுவதற்குத் தங்கி இருந்த புண்ணியமே இவ்வளவு பெரும்பேற்றைத் தருமாயின் அந்த க்ஷேத்திரத்தில் எப்பொழுதும் வசிப்போமாயின் நமக்குவரும் பலனை என்னவென்று மதிப்போம்'என்று புளகாங்கிதங்கொண்டு அக்கணமே புறப்பட்டு காஞ்சி நகரத்திலுள்ள ருத்திரசாலையையடைந்தான்; அவ்விடத்தில் நாடோறும் செய்யும்படி விதித்திருக்கும் ஒழுக்கங்களில் தவறாது நடந்து சிவபூஜையில் சிறந்தவனாய் வாழ்ந்திருந்து தேகாந்தத்தில் சிவலோகமடைந்தனன்.

எழாவது அத்தியாயம் ஆம்பிரவிருக்ஷபிரபாவம் முற்றிற்று.

---

உ

ஸ்ரீகாமாக்ஷிதேவ்யை நம:.

# எட்டாவது அத்தியாயம்.

## விஷயசூசனை.

[இது எழாவது அத்தியாயத்தில் சொல்லிய மாவிருக்ஷமூலத்திலிருக்கும் ஜோதிலிங்கப்பெருமானது ஸ்வரூபம் இது என்பதையும், அந்த ஜோதிலிங்கப் பெருமானைத் தழுவதற்கு உமாதேவியார் ஸ்ரீகைலாஸத்தை விட்டு வந்தகாரணம் இது என்பதையும், கைலாஸத்தைவிட்ட அம்மையார் பதரிகாச்சிரமத்தை வந்தடைந்தமையையும், அந்த ஆச்ரமத்திலுள்ள காத்தியாயனமாமுனிவர் அவ்வம்பிகைக்கு யோகதண்டம் முதலியவை கொடுத்தமையையும், அவைகளைப்பெற்றுக் காசிக்கு வந்தபின்னர் அங்கு யாவரையும் வருத்தியிருந்த துவாதசவருஷ க்ஷாமத்தைப் போக்கினமையையும், அதன் பின்னர்க் காஞ்சிக்கு வந்தபோது யோகதண்டம் முதலியன எல்லாம் சிவபூஜைக்குரிய சிவலிங்கமூர்த்தி முதலியனவாக மாறினமையையும், அதன்பின்னர் அம்மையார் காஞ்சியில் அரியதவமியற்றிவந்ததினால் சிவபெருமானார் கங்கையைக் கம்பாநதியாகப் பெருகிப்போகச் செய்தமையையும், அவ்வெள்ளத்தை உமாதேவியார் பிரளயபந்தனியைக் கொண்டு அடக்கினமையையும், மீளவும் சிவபெருமானார் பிரளயபந்தனியினுடைய கபாலத்தில் அடங்கியிருந்த வெள்ளத்தைப் பெருகிப்போகச் செய்தமையையும், அவ்வெள்ளத்தைக்கண்டு காமாக்ஷிதேவியார் ஏகாம்பரநாதரைத் தழுவினமையையும், தழுவியமாத்திரத்தில் காக்ஷிகொடுத்துத் திருமணம் செய்துகொண்டு யாவருக்கும் அனுக்கிரகம் செய்தமையையும் விளக்குவது.]

## ராசாலேசப் பிரபாவம்.

வேதஸ்வரூபமாகிய ஆம்பிரவிருக்ஷத்திற்கு கீழ்பால் அவ்விருக்ஷ மூலத்தில் சாக்ஷாத் சங்கரர் கதலிகுசுமம் (வாழைப்பூ) போல் ஒரு அஸ்தப்பிரமாணம் ஜோதிஸ்வரூபராய் உமாலிங்கனத்தினால் குசகங்கண சோபிதராய் பிர்ம்மவிஷ்ணு ருத்திர மஹேச்வரராகிய சதுர்மூர்த்திகளுக்கு மத்தியராயுள்ள சதாசிவானுக்கிரகமூர்த்தியாய், அகண்ட ஸச்சிதானந்த தேஜோமயராய், மான் மழுவரதாபய அஸ்தங்களால் பிரகாசிக்கின்றவராய், தவளமேனியராய், நித்திய கல்யாண சுந்தராராய், விபாக்கிரசர்மதாராய் கஜசர்மோத்தரீயராய், பஸ்மோத்தூளித விக்ரஹராய், திரிநேத்திராராய், சந்திரசேகராராய், சர்ப்பங்களாலும் கங்கையாலும், பிரகாசிக்கின்ற ஜடாமகுடதாராய் சவ்யதக்ஷிணங்களில் உமாதேவியும்: கங்காதே

வியும் நின்று வீசப்பட்ட சாமரைகளை உடையவராய், ருத்திரகோடீச்வாராய், ஏகாம்பர மூலத்தில் உள்ளவராய், ஸ்ரீகாமாக்ஷி தேவியார் துதிக்க மகாப்ரயளத்தைப் போக்கி, அவர் வேண்டியாங்கு பாணிக்கிரணம் செய்துகொண்டவராய் நித்திய கல்யாண சுந்தராய் விளங்குகின்றார்.

உமாதேவியார் முன் சக்திகோடிகளுடைய மானத்தைப்பாதுகாத்தற் பொருட்டு சிவபெருமானுடைய நேத்திரங்களைப் புதைத்த ஒருமுகூர்த்த காலத்துக்குள் பிரளயகோரமாய்க் காணப்படும் ஸர்வஸம்கார காலத்தில் உலகமெல்லாம் அழிவுறுதல்போல் அழிந்துசிருஷ்டியாதிகள்மாறி உயிர்களியற்றவேண்டிய தருமங்களெல்லாம் ஒழிந்துபோன அக்காரணத்தால் பாவம் மேலிட்டு அப்பாவங்களெல்லாம் கருமை நிறங்கொண்டு தேவியாரது நித்தியசுந்தரமாகிய தேஜோரூபத்தைக் கருநிறமாக்கியது. அச்சமயத்தில் தேவியார். இறைவன் கண்ணைப் பொத்தியிருந்த கைகளைநீக்கித் தமது திருமேனி மாறுபட்டிருத்தலைப் பார்த்து நடுக்கமுற்றாள்; அதிசயித்து மனவருத்தமுற்று ' இதன் காரணம் யாதோ' என்று எண்ணினாள் சிவபெருமானைப் பலமுறை பணிந்து ' ஹே, தேவ தேவ, மஹாதேவ, கருணாகர, சங்கர, ஸ்வர்ணம்போல் பிரகாசிக்கும் என்மேனி பாவரூபமான கருநிறமடைந்து பார்ப்பதற்குச் சகியாத கோரமாகக் காணப்படும் காரணம் என்னையோ' என்று வினவினர். சங்கரர் 'ஓ, தேவியே, இது கருமை நிறமன்று நீ என்னுடைய கண்களை மூடியதனால் வந்த உயிர்களின் பாவத்திரக்ஷிபாம்என்று கூறத்தேவிகேட்டு உள்ளம் நடுங்கி "ஹே தேவ தேவனே, ஜகந்நாதனே, சரணாகத வத்ஸலனே, கருணாநிதியே, யான் செய்த ஸர்வாபராதங்களையும் கிருபையினால் க்ஷமித்தல் வேண்டும்' என்று துதித்தாள். இதற்கு யான் செய்துகொள்ளத்தக்க பரிகாரமென்னை என்று கண்ணீரரும்பி மீளவும் கேட்டாள். சங்கரர் ' நீ விரைவாய்ப் பதரிகாச்ரமத்துக்குச்சென்று அங்கு ஒரு குழந்தை வடிவங்கொண்டிருப்பாயாக. அவ்விடத்தில் புத்திரப்பேறு வேண்டிய காத்தியாயன முனிவன் வருவான். அவன்உன்னைப் பார்த்தவுடன் புத்திரகாமம் தீர்ந்து மகிழ்ச்சியடைந்து ஞானதிருஷ்டியினால் உன் ஸ்வரூபத்தை அறிந்து தன் ஆச்ரமத்துக்குக் கொண்டுபோய் 8 வருஷம்உன்னைச் சீராட்டியும்